18882



# वैद्यचान्द्रिका

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலத்தின் மாதப் பத்திரிகை

[illegible] October, [illegible] [illegible]

JL
N47.9.10
188821

[illegible] [illegible]
[illegible] [illegible]

[illegible]

வருஷ சந்தா ரூ. 3—0—0

ஸ்ரீ தந்வந்தரயே நம:

# வைத்ய சந்த்ரிகா.

தொகுதி 9] அக்டோபர், 1947 [பகுதி 10

ஆரோக்ய சந்த்ரிகா —
மிளகு ... ... 253
ஆயுர்வேதம் ... ... 256
இந்தியாவின் பூர்வீக வைத்திய கலையின் நிலைமை ... ... 264
"ஓஜஸ்" விளக்கம் ... ... 272
சிகித்ஸை பட்டியல் ... ... 273
தபால் பெட்டி ... ... 274
ஆசிரியர் குறிப்புகள் ... ... 275

**GERMOL.**

:: ஜெர்மால். ::

சொறி, சிரங்குகள், மூன்று நாளில் குணம்.

SCIENTIFIC INDUSTRIALS,
13. BROUGH ROAD,
ERODE. S.I.



## மிளகு

[ம்ந, மெ. ஸ.]

ஸம்ஸ்க்ருதம்: मरिचम् — தமிழ்: மிளகு.
தெலுங்கு: மிரியாலு. — கன்னடம்: மெணஸு.
லேடின்: Piper nigrum. — இங்க்லீஷ்: Black-Pepper.

மிளகு காரமாயும், வாஸனையாயும் இருக்கும்.

**செய்கை:** ஜடராக்நிவர்த்தநி, முறை வியாதி ரோதி, மூத்ரவர்த்தநீ, உதரவாதஹரீ, உஷ்ணகாரி, விஷஹரி. மேலுக்குப் போட தோல் சிவக்கும்.

**உபயோகம்:** அரோசகம், ஸந்யாஸம், சீதஜ்வரம், பாண்டு, கபம், குன்மம், சூலம், பைத்ரியம், வாந்திபேதி, கிரகணி, பிரமேஹம், பங்குவாதம், குய்ய வியாதி, காது வலி இவைகளுக்குக் கொடுக்கலாம். தொண்டை விரணத்துக்கு கஷாயமாகச் செய்து வாய் கொப்புளிக்கலாம். வயிற்றுப் பொருமலைக் குறைத்து ஜீரண சக்தியை அதிகப் படுத்தும். முறைக் காய்ச்சலுக்கு குவைனுவுடன் சேர்த்துக் கொடுக்க அதிக பலன் தருகிறது. கருவங்கத்தைப் பஸ்மமாக்கும் குணமுண்டு.

அளவு. 10–15 உளுந்து நிறை.

இது எல்லாக் காலங்களிலும் அகப்படக் கூடிய ஓர் படரும் செடியில் இருந்து எடுக்கக்கூடிய விதை. சாதாரணமாக மலையாளக் கரையிலும், திருவாங்கூரிலும், குடகு தேசத்திலும் தென்மேற்கு இந்தியாவிலும் கிடைக்கக் கூடியது.

இதை சாதாரணமாய் ஒவ்வொரு வீட்டிலும் சமையலிலும் உபயோகித்து வருகிறார்கள். இது மருந்துகளோடு மருந்தாகவும், ஆஹாரத்தோடும் உபயோகப்பட்டு வருகிறது. த்ரிகடுகம் என்று சொல்லப்படுவதில் இது இரண்டாவது சரக்காகும்.

188821

இரத்தபேதி உண்டாயிருக்கும் போது தூள் செய்த மிளகு 10 முதல் 20 உளுந்து நிறை வரையில் நெய்யில் கலந்து கொடுத்தால் இரத்தம் கொட்டுவது நின்றுவிடுகிறது. இது பலவித முறப்பாக்களிலும், பலவித ஔஷதங்களிலும் சேர்க்கப்படுகிறது. இதன் கஷாயம் ஜ்வர வேகத்தைத் தணிக்கிறது. தலைவலி நீங்கும். உஷ்ணம் குறையும். பாஷாணம் முதலிய விஷ மருந்துகளை உண்டவர்களுக்கும் மிகவும் குணம் அளிக்கக்கூடியது. 40 நாட்கள் காலை மாலைகளில் கஷாயம் உட்கொண்டு வந்தால் ஸர்வ விஷங்களும் நீங்கும். இதை அநுஸரித்தே விஷத்துக்கு மந்திரிப்பவர்கள் மிளகையே எடுத்துக் கொள்வது வழக்கமாக யிருக்கிறது.

வாந்திபேதிக்கு கர்ப்பூரம் ஒருபங்கு, மிளகு 4 பங்கு, அபினி கால் பங்காகச் சேர்த்து அரைத்து மாத்திரை செய்து உபயோகிக்கலாம். தொண்டைப் புண், சரும வியாதிகளுக்கு மேல் பூச்சாக உபயோகிக்கலாம். கட்டிகளுக்கு இதைப் பாலில் அரைத்துத் தடவலாம்.

வயிற்றிலுள்ள அழல்களை மாற்றும் மிளகு ஜீரணப் பையின் மேல் வேலை செய்யும். உஷ்ண இருமல்களுக்கும் சலுப்புக்கும் வெல்லமும் மிளகுத் தூளும் சமமாய்க் கலந்து சுண்டக்காயளவு உட்கொள்ள குணமளிக்கும்.

ஆடுதின்னாப்பாளையுடன் 10 உளுந்து நிறை மிளகுத் தூளைச் சேர்த்து உபயோகிக்க நமைச்சல், படை முதலியவை நீங்கும். ஆடுதின்னாப்பாளை அல்லது குப்பைமேனி சாற்றுடன் மேல் பூச்சாக உபயோகிக்க தோல் வியாதிகள் நீங்கும்.

மிளகு, ஜீரகம் சமபாகம் தூள் செய்ததில் 10-20 உளுந்து நிறை சாப்பிட அஜீர்ணம், பசிமந்தம், உஷ்ண பேதி இவைகள் நீங்கும். வேண்டுமானால் உப்பு சேர்த்துக் கொள்ளலாம்.

மிளகை தாய்ப்பாலில் இழைத்துக் கண்ணில் போட பித்தத் தலைவலி நீங்கும். [illegible] பேதியில் இதன் தூளை நெய்யில் கொ[illegible] குணம் தெரியும்.



மிளகை பாலில் அரைத்துக் கொதிக்க வைத்து தலைக்குத் தேய்த்து ஸ்நானம் செய்தால் கண்ணுக்கு குளிர்ச்சி அளிக்கிறது.

பச்சைமிளகை காடிக்கார ஜலத்தில் ஊரவைத்துப் பித்தத்துக்காகச் சாப்பிடுவதுண்டு. இதற்குப் பாவன மிளகு என்று பெயர். உலர்ந்த மிளகையும் பாவனம் செய்யலாம். பித்தம் நீங்க ஜீரகம் இந்துப்பும் சேர்ப்பதுண்டு. சிலர் எலுமிச்சம்பழ ரஸத்தில் ஊறவைப்பதுமுண்டு. சூரிய உஷ்ணத்தில் வைத்தல் வேண்டும்.

மிளகு இனத்தில் வெள்ளை மிளகு, வால்மிளகு இரண்டு வகைகள் இருக்கின்றன. வால்மிளகை வாஸனைத்திரவியங்களிலும் பாக்குத்தூளிலும் சேர்ப்பதுண்டு. சிற்சில மருந்துகளோடும் சேர்க்கப்படுகிறது. பெரும்பாலோர் தாம்பூலத்தோடு உபயோகிக்கிறார்கள்.

வால்மிளகும் புழுங்கலரிசியும் சேர்த்து வாயில் அடக்கிக்கொண்டு ரஸத்தை உட்கொள்ள உஷ்ண இருமல் நீங்கும்.

வெள்ளை மிளகு மருந்துகளுக்கு உபயோகிக்கப்படுகிறது. பெங்யாளிகளும் மற்றும் சிலரும் வெள்ளைமிளகு, நெல்லி விதை, வேப்ப விதை, கஸ்தூரிமஞ்சள், கடுக்காய்த் தோல் ஆகிய இவைகளை சமமாக எடுத்துத் தூள் செய்து பாலுடன் சேர்த்துக் கொதிக்கவைத்து ஸ்நானம் செய்கிறார்கள். இதுவே பஞ்ச கல்ப ஸ்நானமாகும். வெள்ளை மிளகை தனியே பாலுடன் அரைத்து ஸ்நானம் செய்வதுமுண்டு. வெள்ளை மிளகு மூளையின் மூலமாக உஷ்ணத்தைக் குறைத்து கண்ணில் உஷ்ணத்தால் ஏற்படும் ரணத்தை நீக்கி பார்வையை உண்டுபண்ணும்.

உப்பு, புளி, எலுமிச்சம்பழ ரஸம்— இவை முறிவு பதார்த்தங்களாகும்.

# ஆயுர்வேதம்

[ஆயுர்வேதாசார்ய ஸ்ரீ V. B. நடராஜ சாஸ்திரிகளால் திருச்சி ரேடியோ நிலயத்தில் 6-9-47-ல் பேசப்பட்டது.]

கடவுள் உலகில் மக்களுடைய பசிப்பிணியாற்ற உணவு பதார்த்தங்களைப் படைத்திருப்பது போலவே ஆயுள் அபிவிருத்திக்கும் ஆரோக்ய இன்பமடைவதற்கும் அவசியமான வஸ்துக்களையும் சாச்வதமாய் ஸ்ருஷ்டித்துள்ளார். படைப்பில் இயல்பை விவேகத்துடன் கவனித்தால் இந்த தத்துவம் புலப்படும். நோய்களைப் போக்கி ஆயுஸ்ஸையும், ஆரோக்யத்தையும் அடையும் வழியைப் போதிக்கும் நூலுக்குப் பெயர் ஆயுர்வேதம். வைத்திய சாஸ்திரம் (Medical Science) என்றெல்லாம் அழைக்கப்படுகிறது இதுவே. ஆயினும் ஆயுர்வேதம் என்ற பெயர் மிகவும் அர்த்தபுஷ்டி வாய்ந்தது. எங்ஙனமெனில், ஆயுஸ் என்றால் உயிர் (Life) என்றும், வேதம் என்றால், அறிவு சாஸ்த்ரம் (Science) என்றும் பொருள். ஆயுஸ்ஸைப் பற்றிய வேதம் ஆயுர்வேதம். அதாவது உயிரின் சாஸ்த்ரம் (The science of Life) என்று சுருக்கமான பதவுரை.

ஆயுஸ் என்றால் என்ன? ஒரு தனிப்பட்ட வஸ்துவா? இந்தக் கேழ்விக்கு ஸ்ரீ சரகாசார்யர் அளிக்கும் பதில்—

शरीरेन्द्रियसत्वात्मसंयोगो धारि जीवितम् ।
नित्यगश्चानुबन्धश्च पर्यायैरायुरुच्यते ॥

என்று உடல், ஐம்புலன்கள், மனஸ், ஆன்மா இவைகளுடைய விசேஷச் சேர்க்கையே ஆயுஸ் எனப்படுகிறது என்று பொருள்.

ஆகவே, இச்சேர்க்கையான ஆயுஸ் எவ்விதமிருப்பின் இன்பம்? எவ்விதமிருப்பின் துன்பம்? இன்பத்தை எவ்விதம் பெறுவது? துன்பத்தை எவ்விதமகற்றுவது? ஆயுளை அபிவிருத்தி செய்யும் அல்லது அபஹரிக்கும் வஸ்துக்களோ, குணங்களோ, செயல்களோ யாவை? சுருக்கத்தில் சரீரம், இந்திரியங்கள், மனஸ், ஆத்மா இவைகட்கு ஹிதங்கள் எவை? எவை அஹிதங்கள் என்று போதிக்கும் சாஸ்த்ரம் ஆயுர்வேதம். இவ்விதம் வைத்தியத்தைக் குறிக்கும் மற்ற பெயர்கள் எதிலுமில்லாத உயர் தத்துவங்கள் ஆயுர்வேதமென்ற சொல்லிலிருந்து தொனிக்கின்றன.

## இலக்ஷ்யங்கள்.

ஆயுர்வேத சாஸ்திரத்தின் இலக்ஷ்யங்கள் இரண்டு. மக்களுக்குத் தனிமையிலோ, நாடு பூராவும் சமுதாயத்திலோ நோய்கள் ஏற்படாமல் ஆரோக்ய நிலையைக் காப்பாற்றுவது முதலாவது. ஏற்பட்ட நோய்களை சிகித்ஸையால் அகற்றுவது இரண்டாவது. நாடு பூராவும் ஒரே காலத்தில் சூறையாடும் Epidemic and infections என்று சொல்லப்படும் தொத்து வியாதிகளைப் பற்றிய அறிவு நமது பண்டைய காலத்தினருக்கு இருந்ததா என்றறிய விரும்புவீர்கள். சரகஸம்ஹிதை மூவாயிரம் வருஷங்களுக்கு முன்பு எழுதப்பட்டதாக சரித்திர ஆசிரியர்களின் முடிவு. சரகஸம்ஹிதை இன்னுமப்படியே இருக்கிறது. அதில் ஜனபதோத்வம்ஸநீயம் என்ற தலையங்கத்தில் நாடு பூராவும் ஏக காலத்தில் சூறையாடும் நோய்கள் வரும் காரணங்களையும் வராமல் தடுக்கும் உபாயங்களையும் வந்தபின் செய்யவேண்டிய சிகித்ஸா க்ரமங்களையும் வெகு விரிவாகக் கூறியுள்ளார். சரகஸம்ஹிதையென்ன? அதற்கும் மூத்ததான, பிறந்தநாள் தெரியாத நமது வேதங்களிலேயே ஒரே சமயத்தில் கெடுக ஏற்படும் சூறை நோய்கள் (Epidemic diseases) வர்ணிக்கப்பட்டுள்ளன. ஆயுர்வேதத்தில் இந்தப் பகுதிக்கு ஸ்வஸ்த வ்ருத்தம் என்று பெயர்.

ஆயுர்வேத சாஸ்த்ரக்காரர்கள் வந்த நோய்களைப் போக்கும் சிகித்ஸைப் பகுதியைப் போலவே வியாதிகள் வராமல் தடுக்கும் வழியிலும் அதிக கவனம் செலுத்தி ஆராய்ச்சி செய்துள்ளார்கள். தனிப்பட்ட முறையில்

அல்லது ஸமுதாயத்தில் எந்தவிதமான வியாதிகளுமே எப்பொழுதுமேற்படாமல் பாதுகாக்கக்கூடிய முறைகள் வெகு விவரமாய் ஆயுர்வேதத்தில் கூறப்பட்டிருக்கின்றன. ஒருவன் காலையில் எழுந்திருந்ததிலிருந்து மறுகாலை வரையில் தினந்தோறும் செய்யும் கார்யங்களிலும், மழை, பனி, வெய்யல், காற்றுக் காலங்களில் ஏற்படும் இயற்கை மாறுதல்களிலும் எவ்விதம் நடந்துகொள்ள வேண்டும் என்ற விஷயங்கள் தினசர்யா, ருதுசர்யா என்றுள்ள பகுதிகளில் விசேஷமாய் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆஹாரம், நித்திரை, பிரும்ஹசர்யம், ஸம்போகம் இவைகள் ஒவ்வொன்றையும் ஸமுதாயத்தில் பொதுப்படையாகச் சட்டமிடாமல் இந்தமாதிரி தொழில் புரிபவருக்கு ஆகாரம் முதலிய இவ்வாறு இருக்கவேண்டுமென்று ஆயுர்வேதத்தில் விசேஷமாய் சொல்லப்படுகிறது. எல்லாவற்றையும் விட மனஸைப் பற்றிய நியமங்கள் ஆயுர்வேதத்தில் வெகு அதிகம். வெகு அழகு. பிணிகள் பரவாமல் தடுக்க இக்காலத்தில் கையாளும் முறை அந்தந்த வியாதியின் அரு விஷாம்சத்தை உடலில் ஏற்றி வழக்கப்படுத்திவிடுவது. இதில் பல நோய்களை தடுக்க பல விஷங்களை அடிக்கடி உடலில் ஏற்றிக் கொள்ளவேண்டும். ஆயுர்வேதம் இந்த வழியில் செல்லவில்லை. எப்பொழுதும் எல்லா நோய்களையும் எதிர்த்து நிற்கும் வன்மையை உடலில் இயற்கையாக ஏற்றுவதே ஆயுர்வேதத்தில் வருமுன் காப்பு வழி. இவ்விதம் ஸ்திரமான பலம் சரீரத்திலேற்பட்டு விடும்படிக்கு ஆயுர்வேதம் ஆசரணைகளை விதித்துள்ளது. ஆமாம், உண்மையில், ஆயுர்வேதத்தில் கூறிய ஸ்வஸ்த தர்மங்கள் அனைவராலும் வாழ்நாளில் அனுஷ்டிக்கப்படுமாகில் தனியாகவோ, சமுதாயத்திலோ வாட்டும் வியாதிகள் இப்பொழுதிருக்கிறபடி இத்தனை கொடுமையாக இருக்காதென்பது திண்ணம்தான். ஆயுர்வேதத்தில் சொல்லிய வியாதித் தடுப்பு வழிகள் மிகக் கடினமாக விருக்குமோ, தினசரி வாழ்வில் சாதாரணமாய் நடத்தமுடியாததோவென்று எண்ணிவிட வேண்டாம். வெகு எளிதில் நடத்தக் கூடியவை. இவைகளை விஸ்தாரமாய் அறிய தங்களுக்கு



ஆவலிருப்பின் ஆவலைத் தெரிவியுங்கள். தனித்தனி விஷயமாய் எடுத்து விவரித்துப் பேசுகிறேன். முற்காலத்தில் ஆயுர்வேத ஸ்வஸ்தவ்ருத்தங்கள் மக்களின் ஆரோக்யத்தைக் காப்பாற்ற இன்றியமையாததாகக் கருதப்பட்டபடியால் இவைகள் நீதி நூல்களிலும் இடம் பெற்றுவிட்டன. அவ்விதம் நடக்காவிடில் அநீதி யென்றும், பாபமென்றும் பொதுஜனங்களுடைய ஹிருதயத்தில் வேரூன்றி விட்டன. இந்நாளில் பொதுவாக அநேகர் இந்த சட்டங்களை மீறி நடப்பதே தினசரி வழக்கத்திற்கு வந்துவிட்டது. அதனால் ஆரோக்கிய சுகம் குன்றி வியாதி தண்டனைக்குள்ளாக வேண்டியிருக்கின்றது.

யாரை ஸ்வஸ்த்தன் 'நோயற்றவன்' என்று சொல்லுவது? சரீரத்தில் வியாதிக்கோளாறு ஒன்றுமில்லாமல் ரத்தம் முதலிய குறைவின்றி, உடல் நிறை உயரத்திற்கும் வயதிற்கும் சரியாயிருந்துவிட்டால் இவன் ஸ்வஸ்தன் என்று நவீன வைத்திய சாஸ்திரக்காரர்கள் அத்தாட்சி கொடுத்திருக்கிறார்கள். ஆயுர்வேத சாஸ்த்ரம், உடற்கூறைமட்டும் கவனித்து ஸ்வஸ்தன் என்று சொல்லிவிடக் கூடாது. அந்தரங்கமாகிய மனஸ்ஸையும் இந்திரியங்களையும் ஆன்மாவையும் கவனித்து ஸ்வஸ்தன் என்று சொல்லவேண்டுமென்று கூறுகிறது.

समदोषः समाग्निश्च समधातुमलक्रियः ।
प्रसन्नात्मेन्द्रियमनाः स्वस्थ इत्यभिधीयते ॥

உடலுறுப்புக்கள், உத்பத்தி வளர்ச்சிக்கழிவுகள், சீதோஷ்ணம், இவைகளைக் காட்டிலும் வாதபித்த கபங்கள் எல்லாம் ஒழுங்காக ஸமநிலையிலிருக்க வேண்டும். இதுமட்டுமல்ல. ஞானேந்திரியங்கள், மனஸ் ஆத்மா இவைகளும் தூய்மை பெற்று விளங்கவேண்டும். இவன் ஸ்வஸ்தனெனப்படுவான் என்று பொருள். மனத்தூய்மையும் சேர்க்க வேண்டியதெதற்காக? சொல்லுகிறேன். உடலுறுப்புக்களின் வளர்ச்சி பலம்முதலிய மானிடருக்கும் மிருகங்களுக்கும் பொதுவானது. அறிவு ஒன்றினால்தான் மனிதன் விசேஷமாகிறான். ஆகவே மனிதனுக்கு ஸ்வஸ்த

லக்ஷணம் கூறும்போது அறிவு நிலையைப் பற்றிக் கவனியாது விட்டால் எங்ஙனம் சரியாகும்? மனிதப்பிறவியில் பயனைப் பெறும் நோக்கத்துடனிருப்பவனுக்கு உடலின் ஆரோக்கியம் போல் உள்ளத்தின் தூய்மையும் இன்றியமையாததென இரண்டையும் சேர்த்துக் கூறுகிறது ஆயுர்வேதம் மனதிலேற்படும் வருத்தம், கோபம், மதம், மாச்சரியம், லோபம், அசூயை முதலிய தீக்குணங்களால் சரீரத்தில் நோய்கள் ஏற்படுகின்றன. கண், காது, நாக்கு, நாசிகை, ஸ்பர்சம் ஆகிய ஐம்புலன்களை அவைகளுடைய கார்யங்களில் ஒழுங்கீனமான முறையில் உபயோகிப்பதால் உடலில் பல பிணிகள் வாட்டுகின்றன. இந்த விஷயங்கள் சாங்கோபாங்கமாய் ஆயுர்வேத ஸ்வஸ்தவ்ருத்தத்தில் கூறப்பட்டுள்ளன.

ஆயுர்வேதத்தில் ஸ்வஸ்தவ்ருத்தப் பகுதியானது பண்டைக்காலத்திலேயே மேலும் இரண்டு கிளைகளாக விரிந்தோங்கின. ஸ்வஸ்தனுயிருப்பவனுக்கு சரீர தாதுக்களில் காய கல்பங்களினுல் விசேஷ சக்தியை உண்டாக்கி மூப்புப் பிணிகளை யகற்றி, வஜ்ர திருடகாத்திரத்துடன் நீடூழி வாழும் சக்தியைப் பெறுவது ஒன்று. இதற்கு ரஸாயன அங்கம் என்று பெயர். மற்றது வாஜீகரண அங்கம். இது மிகவும் சிரேஷ்டமான குணங்கள் வாய்ந்த புத்திரர்களை உற்பத்தி செய்யும் உபாயங்களைப் போதிப்பது. ரஸாயன—வாஜீகரண அங்கங்கள் ஆயுர்வேதம் தவிர மற்ற வைத்தியசாஸ்திரங்களில் மிக அரிது.

### சிகித்ஸைப் பகுதி.

வந்த வியாதிகளைப் போக்கும் ஆயுர்வேத சிகித்ஸா விபாகமானது ஆதிகாலத்தில் காய சிகித்ஸை (Medicine) சல்ய சிகித்ஸை (Surgery) என்று இரண்டாக முதலில் பிரிந்தன. காய சிகித்ஸை மருந்துகளினுல் செய்வது, இதற்கு ஆத்ரேய ஸம்பிரதாய மென்றும், சல்ய சிகித்ஸை ரணவைத்தியம் சஸ்திரங்களினுல் செய்வது. இதற்கு தந்வந்தரி ஸம்பிரதாயமென்றும் பெயர், அந்தந்த சாஸ்திரங்களை வளர்த்தவரின் பெயரின் மேல் ஏற்பட்டது.



ஆயுர்வேத காயசிகித்ஸையின் மகத்துவத்தைப்பற்றி அதிகம் கூறத்தேவையில்லை. இதிலிருக்கும் அபார சக்தி வாய்ந்த மருந்துகளுடைய பிரபாவம், சிகித்ஸா யுக்திகள் (Scientific reasonings) பத்திய பிரகாரங்கள் எல்லாம் மிக சிரேஷ்டமானவை என்று வெளிநாட்டாரும் சிலாகிக்கின்றனர். ஆயுர்வேதத்தில் ரண வைத்தியம் இல்லையென்று சிலர் நினைப்பது தவறு. சல்ய சிகித்ஸை (Surgery) யிலும் கிரந்தோபதேசங்கள் பூர்ணமா யிருக்கின்றன. அரசாங்க ஆதரவு அற்றுப்போனதால் ஆயுர்வேத சல்ய சிகித்ஸைப்படி செய்ய முடியாமல் ரணவைத்திய சம்பிரதாயம் க்ஷீணதசையிலிருக்கிறது. கிரந்தங்கள் இன்னமுமிருப்பதால் ஆயுர்வேத சல்ய சிகித்ஸை (Surgery) யை புனருத்தாரணம் செய்வது மிக எளிது.

பிறகு நாளடைவில் சாஸ்த்ர வளர்ச்சி அதிகமாகி ஆயுர்வேதத்தில் காயம், சல்யம் எனப்படும் மருந்து, ரணவைத்திய அங்கங்கள் மேற்கொண்டும் விரிந்து பிரிந்தன.

அவையாவன :—

1. **சாலாக்கியம் :** சிரஸ், கண், காது, மூக்கு, வாய், பல், வியாதிகளைப்பற்றி விஸ்தரித்துக் கூறுவது.
2. **கௌமாரப்ருத்யம் :** சிசுக்களுக்கு கர்ப்பம் முதல் பாலயப் பருவம் வரை பிரத்யேகம் சிகித்ஸை போதிப்பது. இதில் ஸ்திரீ ரோகங்கள், பிரஸூதிகா தந்த்ரம் (Midwifery) பூராவும் அடங்கியது.
3. **அகதம் :** இடு விஷம் இயற்கை விஷம் கடி விஷம் முதலிய விஷ சிகித்ஸையைப் பற்றியது. யுத்த காலத்தில் காற்றிலும், நீரிலும், நிலத்திலும் சத்துருக்களால் கலக்கப்படும் விஷத்தைப் போக்கும் உபாயங்கள் அந்தப் புராதன காலத்திலேயே வெகு விரிவாய் உபதேசிக்கப்பட்டிருப்பதை சுச்ருத சம்ஹிதையில் இன்றும் காணலாம்.

4. **பூதவித்யா:** (Mental diseses) என்ற மனதில் ஏற்படும் வியாதிகளைக் களைவது. பேய் பிசாசங்கள் பிடிக்காமல் தடுப்பது.

இந்த நான்கு, முற்கூறிய ரஸாயனம், வாஜீகரணம், காயம் என்ற மருந்து, சல்யம் என்ற ரணவைத்தியம், ஆக எட்டுவித பிரிவுகளிலும் தனித்தனியே அநேக ஆசிரியர்கள் பலபல ஆராய்ச்சிகள் செய்து ஏராளமாக நூல்களையுமியற்றியுள்ளார்கள். இவ்விதம் ஆயுர்வேதத்துக்கு அஷ்டாங்கங்கள் என்றும் பிரஸித்தி ஏற்பட்டது.

### ரஸ சாஸ்திரம்.

ஆயுர்வேத மருந்துகளில் பிராணி வர்க்கங்களும் தாவர இனங்களும் பிரயோகிக்கப்படுவது போல் உலோகங்களும் விசேஷமாய் கையாளப் படுகின்றன. ரஸ கந்தக பாஷாண வகைகளுடைய பிரயோகத்தைக் கூறும் ரஸ சாஸ்திரமானது புத்தருடனிருந்த ஸ்ரீ. நாகார்ஜுனர் காலிலேயே மிகவும் விஸ்தார மடைந்து விட்டது. பிறகு 27 ஸித்தர்களுடைய ஆராய்ச்சிகளால் வளர்க்கப்பட்டு இது ஒரு தனி சாஸ்திரமாகவும் ஆகிவிட்டது. விலை உயர்ந்த மணிகள் ரத்னங்கள், உலோகங்கள், விஷ பாஷாணங்கள் யாவும் எந்த விதத்தில் அமிருதம் போல சரீரத்தில் சேருகின்றன என்ற தத்துவத்தை ஆயுர்வேத ரஸ சாஸ்திரம் அழகாய் போதிக்கிறது. (Modern chemistry) யால் இன்னும் அறிய முடியாத சில நுட்பங்கள் ஆயுர்வேத ரஸ சாஸ்திரத்திலடங்கியுள. மருந்துகள் வெகுகாலம் வீர்யங் குன்றாமலிருப்பது, குறைந்த அளவில் அரிசியிடைக் கணக்கில் சாப்பிடக்கூடியதானதால் அருசிக்கு இடமில்லாதது, சீக்கிரத்தில் வியாதியை நேரடியாக எதிர்த்துப் போக்கும் சக்தி ஆகிய குணங்கள் மேலிட்டுள்ளபடியால் ஆயுர்வேதத்தில் பஸ்ம ஸிந்தூரங்களைப் போதிக்கும் ரஸ சாஸ்திரமானது மிக முக்கியத்துவம் பெற்றுள்ளது.

### பேஷஜகல்பம்.

பேஷஜகல்பம் என்று சொல்லப்படும் மருந்து செய்முறைகளில் அதைப் பிரயோகம்செய்யும் வைத்தியனுக்குப்



பூர்ண ஞானமிருக்க வேண்டுமென்று ஆயுர்வேதம் வற்புறுத்துகிறது. இது ஆயுர்வேதத்தில் ஒரு முக்கியக் கலையாகும். எல்லா விறகும் எரிந்து சூடு கொடுப்பவையே. ஆயினும் இந்த மரத்தின் விறகு போட்டு எரித்தால் மருந்தின் குணம் இவ்வாறு மாறுபடுகிறது என்று ஒரு விசேஷ நுட்பத்தை ஆயுர்வேத மருந்து செய்முறை சாஸ்திரம் கண்டுபிடித்துக் கூறுகிறது. இந்த ஸூக்ஷ்மத்தை நவீன ரஸாயன சாஸ்த்ரம் இன்னம் அறியவில்லை.

### சாரீரம் (Anatomy and Physiology)

உடலுறுப்புக்களின் அமைப்புக்களையும், தொழில்களையும் பற்றிக் கூறும் பாகமானது ஆயுர்வேதத்தில் 'சாரீரம்' என்று சொல்லப்படுகிறது. நவீன விக்ஞான சாஸ்திரங்களில் மிக சமீபகாலத்தில் கண்டுபிடிக்கப்பட்ட விஷயங்கள் ஆயுர்வேத சாரீரத்தில் பல்லாயிர மாண்டுகளுக்கு முன்பே விளக்கப்பட்டிருக்கின்றன. இன்னமும் கண்டுபிடிக்கப்படாத 'ஓஜஸ்,' 'பஞ்சபூதங்கள்' போன்ற பல விஷயங்களும் ஆயுர்வேதத்திலிருக்கின்றன. சரீரத்திற்கும் உலகிலுள்ள மற்ற பொருள்களுக்கும் தொடர்ந்திருக்கும் பொதுத் தன்மைகள், கார்யங்கள் எல்லாம் ஆயுர்வேதத்தில் சொல்லியிருக்கிறபடி அவ்வளவு ஸூக்ஷ்மமாய் மற்ற இடங்களில் இன்னும் காணமுடியவில்லை.

### நிதானம்.

நிதானம் என்ற வியாதிகளுக்குப் பற்பலவித காரணங்கள், அவைகள் உடலைப் பாதிக்கும் பிரகாரங்கள், உள் வெளித்தோற்றங்களால் நோயின் அந்தந்தநிலைகள் மரணக் குறிகள், ஸாத்யாஸாத்யங்கள் இவைகளைப் பற்றி போதிக்கும் ஸ்தானத்திற்குப் பெயர். ஜீவாணுக்கள் (Bacillies and Parasites) மூலம் வியாதிகள் பரவுவதை, ஆயுர்வேதத்தில் முன்பே அறிந்துள்ளபோதிலும் ஜீவாணுக்கள் வெளிக் காரணங்களென்று அவைகட்கு முக்கியத்துவம் கிடையாது. உடலில் ஆட்சிபுரியும் வாதபித்த கபங்களுக்கே ரோகம், ஆரோக்யம் எல்லா நிலையிலும் பிராதான்யம். மல மூத்ர பரீக்ஷகள் அஷ்டஸ்தான பரீக்ஷ

யெல்லாம் நிதான ஸ்தானத்தில் விஸ்தரித்துக் கூறப்பட்டுள்ளன. நாடி பரீக்ஷை என்னும் (Pulse examination) ஆயுர்வேத நிதான சாஸ்த்திரத்தில் மிக அருமையானது. இதில் இயந்திரங்களுடைய சாதனங்களை ஆயுர்வேதம் தடுக்கவில்லை. இயந்திரங்களின் உதவியின்றி நோய் நிலைகளை அறியும் வழிகளை ஐயமறக் காண்பித்துள்ளார்கள். இயந்திரமின்றி நோய் நிலையை நிச்சயிக்க முடியாதென்ற கஷ்டம் ஆயுர்வேதப்படிக்கில்லை.

## சிகித்ஸா.

சிகித்ஸா என்ற ஸ்தானத்தில் ஸகல ரோகங்களுக்கும் மருந்துப் பிரயோகங்கள் யுக்தியோடு கூறப்படுகின்றன. நோயுற்ற தாதுக்களை அகற்றிப் புதிய ஜீவதாதுக்களை உற்பத்தி செய்வதே ஆயுர்வேத சிகித்ஸையில் மூலக் கொள்கை. இயற்கையை அநுசரித்து அன்னபானம் முதல் பற்பல விதத்தில் ஔஷத சாரத்தை உடலில் தகுந்தபடி ஏற்றுவிக்கிறது. உட்பிரயோகங்கள் போல வேகத்தில் பயனளிக்கும் வெளிப் பிரயோகங்களும் பலவுண்டு.

## பொதுக் குறிப்பு.

உங்களுக்கு ஒரு ஸந்தேகம் உதிக்கலாம். ஆயுர்வேதமெழுதப்பட்டு பல்லாயிரம் ஆண்டுகள் கடந்துவிட்டன. வெகு நூற்றாண்டுகளுக்கு முன்பே ஆராய்ச்சியின்றி வளர்ச்சியற்று விட்டது. அக்காலத்தில் ஆயுர்வேதம் உயர்ந்ததாயிருந்தாலும் இப்பொழுதும் எவ்வளவோ மாறுபட்டுள்ள கால நிலையில் பயனளிக்கக் கூடியதாக இருக்க முடியுமா? தற்சமயம் நவீன வைத்திய சாஸ்திரக் கொள்கைகள் தினந்தோறும் மாறுகின்றதைப் பார்த்து ஆயுர்வேதத்திலும் உங்களுக்கிந்த ஸந்தேகமேற்படக் கூடியதே. ஆயுர்வேதத்தின் மூல விஞ்ஞான ஸித்தாந்தங்கள் (Principles of Basic sciences) சிறிது தெரிந்தால் சந்தேகம் விலகிவிடும்.

ஆயுர்வேதத்தின் திரிதோஷ, பஞ்சபூத, ஷட்ரஸ ஸித்தாந்தங்கள் என்றென்றைக்கும் மாறாததும், உபயோக



மானதும், காலதேச மாறுதல்களால் புதிதாய் வரக்கூடிய வியாதிகளையும் சிகித்ஸை செய்யும் ஆற்றல் பெற்றுள்ளதும், புதிய விஞ்ஞான முன்னேற்றங்களுக்கும் கூட வழி வைத்துக்கொண்டுமிருக்கின்றன. பல்லாயிரம் வருஷங்களுக்கு முன்பு எழுதப்பட்ட ஆயுர்வேதத்தில் கூறியபடிக்கு வைத்தியம் செய்தால் இன்றைக்கும் நாளைக்கும் பிணிகள் நசித்துப் போகின்றனவே. இந்தப் பிரத்யக்ஷாநுபவத்தைப் பார்க்கிலும் ஆயுர்வேதம் என்றென்றைக்கும் மாறாத சிலதத்துவங்களைக் கண்டுபிடித்துக் கையாளுகிறது என்பதற்கு அத்தாக்ஷி வேறென்ன வேண்டும்? கால ஜீர்ணம் என்ற தோஷம் ஆயுர்வேதத்திற்கில்லை.

ஆயுர்வேதத்தில் விஞ்ஞான மகத்துவத்தோடு கூட மற்றும் பற்பல குணங்கள் வாய்ந்திருக்கின்றன. வியாதிகள் நிர்மூலமாய் குணமாகின்றன. பணச்செலவு மிகக் குறைவு. எல்லோருக்கு மெளிதில் கிடைப்பது. அருகில் கிடைக்கும் பச்சிலைகளினாலேயே பெரும் பிணிகள் தீருகின்றன. நம் நாட்டினரின் இயற்கை பழக்க வழக்கங்களுக்கு ஏற்றதான ஆகாரம், ஆசாரம், மருந்துகளையே உபதேசிக்கின்றது.

அரசாங்க ஆதரவு இல்லாவிடினும் இவ்விதம் ஆயுர்வேதம் எல்லாத்துறைகளிலும் சிரேஷ்டமாக இருப்பதால் தான் இப்பொழுதும் 100-க்கு 80 பேர்களுக்கு மேல் ஆயுர்வேத வைத்தியத்தை நாடுகின்றனர்.

அன்பர்களே, உலகிற் காணும் ஸகல வைத்திய சாஸ்திரங்களுக்கும் மூலசாதனம் ஆயுர்வேதமே. மற்றவர்களால் கிரஹிக்கப்படாத ஸாராம்சங்கள் இன்னமுமிதிலிருக்கின்றன. விக்ஞானத்தில் உயர்ந்ததாயினும் ஆயுர்வேதத்திற்கு அரசாங்க ஆதரவு இதுவரை இல்லாதால் கிரியாம்சையில் சில குறைகள் ஏற்பட்டுள்ளன. இனி சுதந்தர இந்தியாவில் ஆயுர்வேதம் புத்துயிர் பெற்றோங்கி முன்போல் உலகிற்கு ஆரோக்கிய சுதந்திரமளிக்கும்.

ஜய ஆயுர்வேத.

# “இந்தியாவின் பூர்வீக வைத்திய
: : கலையின் நிலைமை.” : :

[டாக்டர். T. G. ராமமூர்த்தி அய்யர்,
ரிடயர்ட் மெடிகல் ஆபிஸர், கலையாராய்ச்சியாளர், ஈரோடு,
கோயமுத்தூர் ஜில்லா.]

நம் தேசம் விடுதலைபெற்றும், மக்கள் அடிமை நீக்கப்பட்டாலும், நம் நாட்டு பூர்வீக கலைகளும் நாகரீகமும் விடுதலை பெறவில்லை. அதன் அடிமைத்தனமும் நீங்கவில்லை. அவை சிறைவாசம்தான் செய்கின்றன.

புராதன இந்தியாவின் கலைநாகரீகம் என்று சொல்லும்போதே இக்காலத்தில் யாவர்க்கும் சிறிது அதிருப்தியே உண்டாகிறது. ஏனெனில், நவீன விக்யான (Science) கலைகளின் அபிவிர்த்தியால், நீராவியந்திரங்கள், மோட்டார்கள், ஆகாய விமானங்கள், நூல் நூற்கும் யந்திரங்கள், நெசவு செய்யும் யந்திரங்கள், எலக்டிரிக்சிடி, எக்ஸ்ரே முதலியன கண்டுபிடிக்கப்பட்டு வழங்கப்பட்டிருக்கிறபடியாலும், நம் தேசத்து கலை நாகரீகங்களில் இவைகளில்லாமையாலும், நவீன நாகரீகத்தைப் போற்றவேண்டி யிருக்கிறது. இவை யாவும் மக்களுக்கு இன்றியமையாத சாதனங்களென்பதிலும் சந்தேகமில்லை. நாடு சுதந்திரமடைந்தாலும், இச்சாதனங்களும் நமக்குத் தேவையானதே தான். ஆனால் அணுகுண்டு போன்ற உலகநாசத்தை யுண்டுபண்ணும் சாதனங்கள் மட்டும் மக்கள் குலையை நடுங்கச் செய்கிறது. இச்சாதனங்கள் யாவும், நம் ஐம்புலன்களாலறியும் இயற்கை சுபாவத்தின் பிரத்யக்ஷ பாகத்திலிருந்து உண்டாக்கப்பட்டவை. இயற்கையானது இருவித பாகத்தையுடையது. இரவும் பகலும் சேர்ந்தே ஒரு முழுநாளாவது போல, உலகில் காணப்படும் எவ்வஸ்துவும் இரு பாகங்களமைந்தது. பிரத்யக்ஷ பாகத்தை தோற்றுவிக்கும் உட்கருவி சாதனமா



யமைந்திருக்கும் பாகம், இயற்கையின் இரகசியதத்துவம். இப்படிப்பட்ட இயற்கையின் இரகசிய தத்துவங்களைத் தெரிவிக்கும் நூல்கள்தான் வேதம், சாஸ்திரம், புராணம், இதிஹாஸம், தத்துவம் என்பன.

இப்படிப்பட்ட ஸ்திரமான ஆதாரங்களைக் கொண்டு இத்தேசத்து மகா ஞானிகளான ரிஷிகளும், சித்தர்களும், நாகரீகமும் கலைகளையும் நிர்மாணம் செய்தார்கள்.

சுவாசத்தையும், நாடியையும், ரத்தோட்டத்தையும், இருதயத்திலுண்டாகும் சப்தத்தையும் பந்தனம் செய்து காற்று வெளிச்சம், அன்ன ஆகாரமில்லாமல் பூமிக்குள் பலநாள் ஸமாதியிருந்து, பின் உயிருடன் எழும் ஆச்சரியமான செய்கையை யாவரும் கண்டிருக்கிறோம். மேல்நாட்டு விக்கியான (Scientists) கலையாளிகளும், டாக்டர்களும் கண்டு ஆச்சரியமடைந்திருக்கிறார்கள். ஆனால் இச்செய்கையை செய்ய தங்கள் நவீன உடற்கூறு உயிர்க்கூறு சாஸ்திரங்களில் என்ன ஆதாரமிருக்கிறது? இந்நிலையிலிருக்கும் ஒரு மனிதனை, நவீன வைத்தியகலை ஆராய்ச்சியின் பிரகாரம் ஒரு டாக்டர் பரிசோதிப்பாரானால், இம்மனிதன் இறந்து விட்டானென்று தானே கூறமுடியும்? தவிர நவீன விக்கியான ஆராய்ச்சிகளோ, தினமும் மாறிக்கொண்டே யிருக்கின்றன. முன் சொன்ன விஷயங்களெல்லாம் பின்னால் கண்ட ஆராய்ச்சியால் தப்பிதமெனஅடிபட்டு விடுகிறது. இதனாலே முன் ஆராய்ச்சியை நம்பி ஓர் சிகிச்சை செய்தால் அவை தப்பிதங்களென ஏற்படுகிறது. “பிராக்ரஸிவ் சயன்ஸ்” என்ற பெயரால் மனிதன் பலியிடப் படுகிறான் என்பது மிகையாகாது.

இந்தியாவின் வைத்திய கலையானது, இயற்கையின் என்றும் மாறாத சுபாவங்களான ஸ்ருஷ்டி தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு சாஸ்வதமான அஸ்திவாரத்தின் பேரில் நிர்மாணித்த உன்னத கலையாகும்.

ஆகையினால் இவ் வைத்திய கலையை புனருத்தாரணம் செய்து, பூர்வீக உன்னத நிலைமைக்கு கொண்டுவந்து உலக

ஒவ்வோர் குடும்பத்திலும், பிறந்த சிசுக்கள் முதல் வயோதிகர்கள் வரை யாவராயினும் தங்கள் திரேகத்திற்கு சிறிது அசௌக்ய முற்றால், இக்குடும்பத்திலுள்ள பெரியோர்களோ, சமீபத்திலுள்ள வீட்டாரோ, உடனே ஓர் பரிஹாரம் செய்து, நோயின் உபத்திரவங்களைத் தணித்து, அதன் வேகங்களை அடக்கிவிடும் சாமர்த்திய முள்ளவர்கள். இவர்கள், உண்ணும் ஆகாராதிகளை ருசிகரமாகவும், ஜீரணமாகும்படியாக பக்குவம் செய்ய உபயோகிக்கும் சுக்கு, மிளகு திப்பிலி, லவங்கப்பட்டை, கிராம்பு, ஏலம், பெருங்காயம், இஞ்சி, ஓமம், சோம்பு, வசம்பு, கடுக்காய், நெல்லிக்காய், ஜாதிக்காய், கருவேப்பிலை, கொத்தமல்லி விதை, தழை இவைகளைக் கொண்டும் இன்னும் வாசல் வழிகளில் முளைத்திருக்கும் பூண்டு செடிகளான துளசி, தூதுவளை, கண்டங்கத்திரி, பொடுதலை, முதலியவைகளைக் கொண்டும் தயாரித்த சட்னிகளாகவும், ரச கஷாயங்களாகவும், ஆகாரமாகவே கொடுத்து, உடல் நலத்தைக் காப்பாற்ற, தொன்று தொட்டு, பரம்பரையாகத் தெரிந்திருக்கிறார்கள். இன்னும் கிராமவாசிகள், விவசாயிகளானபடியால், அவர்களுக்கு அடிக்கடி நேரிடும் காயங்கள், புண்கள், எலும்புகள் ஒடிதல், முதலியன தினசரி வாழ்க்கைத் துன்பங்களானபடியால், புல்பூண்டு கீரைகள் முதலியவைகளையும், எண்ணை, வெண்ணை முதலியவற்றையும் உடனே உபயோகித்து சொஸ்தம் செய்துகொள்ளும் சுலபவழிகளை அறிந்திருக்கிறார்கள். பாம்பு, தேள், பூரான் முதலிய விஷ ஜந்துக்களின் கடிகளின் சிகிச்சை ரொம்ப சுலபமான முறையிலிருப்பதால், இவர்களுக்கு இம்மாதிரி துன்பங்கள் வாழ்க்கையில் தினசரி நேரிடக் கூடியதானமையால், தாங்களும், அண்டை அயலாருமே, சுலபமாகக் குணமாக்கும் முறைகளைக் கையாண்டு வருகிறார்கள். நம் தேசத்திய கூர்ந்த அறிவாளியும், சிரேஷ்டருமான, காலம் சென்ற திவான் பஹதூர் L. D. ஸ்வாமிகண்ணுபிள்ளை, M. A., L. L. D. அவர்கள் சென்னையில் நடந்த சித்தவைத்தியர்கள் மகாநாட்டில் தலைமை வகித்தபோது, "தமிழ் வைத்தியத்தைத் தாய்ப்பாலோடுண்டுவந்தவ" னானபடியால், நான் இப்பொறுப்பை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டேனென்



றார் என்றால், மற்றவர்கள் இவ்வைத்தியத்தைக் குறைவாகப் பேசுவதெல்லாம் மூன்றுவித காரணங்களேயாகும்.

முதலாவது, இவ்வைத்தியன் நுட்பமான விஷயங்களை அறியாத காரணம், இரண்டாவது மேல்நாட்டாரின் நாகரீக மோகம், மூன்றாவது சுயநலம், இவைகளைத் தவிர வேறு யாது காரணமும் சொல்வதற்கில்லை.

நம் நாட்டுக் கலைகளும், நாகரீகங்களும், உன்னத நிலைமையிலிருந்த காலத்தில், மேல் நாட்டார் அநாகரீக ஜாதியாராயிருந்தார்கள் என்பது சரித்திரங்களே சித்தரிக்கின்றன. அக்கலைகளும் நாகரீகங்களும், மனிதர்கள் சாத்வீக வாழ்க்கைக்கு உகந்தவையாயிருந்தன வென்பதும் யாவரும் அறிந்த உண்மை. அன்னிய நாட்டினர் நம் தேசத்திற்குள் புகுந்த காலம் முதல், இந்திய நாகரீகங்கள் சிதறுண்டு போயின வென்பதும் உண்மை. அன்னியர் ஆக்ஷியால், இவைகள் ஆதரவிழந்து போயின வென்பதும் உண்மை. நவநாகரீகங்களும், அதில் தோன்றிய கலைகளும், மிருக உணர்ச்சியைத் தான் உண்டாக்குகிற தென்பது எல்லா தேசத்தினரும் கண்கூடாகக் கண்ட காக்ஷி. நவீன வைத்திய கலையானது என்றும் நிரந்தரமாக பிராகரசிவ்சயன்சாகவே (Progressive Science) சிரஞ்சீவித்தனம் பெற்றிருப்பதும் அறிவாளிகள் அறிந்த உண்மை. ஸ்திரமான அஸ்திவாரத்தின் பேரில் நிர்மாணிக்காத மாடமாளிகை கூடகோபுரங்கள் குட்டிச்சுவராகி விடுமென்பது யாவரும் அறிந்த விஷயம். இந்தியாவின் பூர்விக கலைஞானங்களும் நாகரீகமும், என்றும் மாறுபடாத இயற்கையின் குணாதிசயங்களை சரிவர உணர்ந்த மஹரிஷிகள் நிர்மாணித்திருக்கிறார்கள் என்பதும் உண்மை.

இப்படியிருக்க, நம்மில் சிலர், இவ்விஷயங்களை சரிவர ஆராயாமல், குறை கூறுவதும், இவைகள் அபிவிருத்திக்கு முட்டுக்கட்டை போடுவதும், நம் நாடு விடுதலை யடைந்தும், அதன் தவப்பயன் விடவில்[illegible]வும்.

நம் நாடு க்ஷேமமடை[illegible]வண்டியில், [illegible]ர்வீக கலைகளும் நாகரீகங்களும் [illegible] உன்னத நிலை[illegible]க்குக்

18824

கொண்டு வரவேண்டும். இவை உன்னத நிலைமையை காண வேண்டில், நம் நாட்டிலுள்ள மேல் நாட்டு பித்தர்கள் பிதற்றலை கண்டிக்கத் தக்க நடவடிக்கைகள் கையாள வேண்டும். வைத்தியகலை உன்னத நிலைமைக்கு வர இந்த ஒரே ஒரு "கண்ட்ரோல்" (Control) தான் அவசியமாகவும் அவசரமானதாயுமிருக்கிறது.

கொடிய நோய்களையும், சுலபமான சிகிச்சைகள் மூலம் ஆச்சரியகரமாக குணப்படுத்துவதில் சிறந்தது நம் தேச சிகிச்சை முறைகள்.

நோய்கள் வராமல் தடுக்கவும், வந்த நோய்களை குணப்படுத்தவும், தொன்று தொட்டு பல்லாயிர வருஷகாலமாய், நம் நாட்டினர் கையாண்டு வரும் முறைக்கு "**மணி- மந்திரம்- ஔஷதம்**" என்பதாகப் பெயர். இப்பெயர் இந்நாட்டில் ஓர் பழமொழியாக விளங்குகிறது.

. அடுத்த வியாசத்தில், இவ்வித சிகிச்சை யாவையென்றும், இவை எப்படி பிரயோஜனப்படுகிற தென்பதையும் விவரமாக ஆராய்வோம்.

---

# "ஓஜஸ்" விளக்கம்

**[சிவானந்த சிகித்சா மந்திரம்,**
**E. S. இராமசாமி சோதிடர், R. I. M. P., M. I. H.]**

ஆரோக்கியமுள்ள திடபுருஷன் சமதரையில் மல்லாந்து படுத்து தன் இரு செவித்துளையை நடுவிரலால் அடைத்துக்கொண்டு அகமுகமாகக் கவனித்தால் அமுத நாடியூடே செல்லும் வேகம் செவிப்பறையிலுராய்ந்து சென்று ஓர்வித ஓசை ஏற்படும். இந்த ஓசையையே "ஓஜஸ்" என்று கூறப்பெறும். இந்த ஓஜஸ் பிணியால் குறைவதும், ஆரோக்கியம் வர வர அதிகரிப்பதும், மரணத்தில் வெளியேறி விடுவதுமான சக்தியாகும். இவை குறைந்தால் வாயு (வாதம்) செயல் மாறுபடும். காதின் ஓசை அடிக்கடி வித்யாசம் பெறும். இதை அழியாது செய்யப் பாதரசத்தாலாகும். போதுமான அளவு விருத்தி செய்ய "அசுவகந்தி" போன்ற பல மூலிகைகள் உள்ளது,

இவைபோன்ற வினாக்கள் பல அறிஞர்களால் அறிவிக்கப் பெறின் ஆண்டவன் அருளால் அறிகின்ற அளவு சந்திரிகையில் அறிவிக்கலாம். யான் கூறும் விடைகள் சரியானதெனத் தோற்றப் படாத போது வேறுவிடைகள் அனுப்பி அபிவிருத்தி செய்ய முற்படுவீர்களாக.

---

## चिकित्सा विवरण पट्टिका ॥

# (சிகித்ஸை பட்டியல்)

## (CASE-SHEET)

**[ஸ்ரீ. T. S. ஈசுவரய்யர், L. I. M., திருச்சி.]**

ஆதுரனின் வியாதியைப் போக்கி, அவனுக்கு ஸ்வாஸ்த்ய நிலைமையை உண்டு பண்ணுவதே சிகித்ஸையினுடைய பரம தாத்பர்யம். நன்கு சிகித்ஸை செய்யவேண்டுமாயின், அவனுடைய வியாதியின் பூர்ண ஸ்வரூபத்தை அறிந்தே யாகவேண்டும். வியாதியை அறிய ரோகியினுடைய சரீரம் முழுவதையும் பரிக்ஷை செய்வதுமட்டுமின்றி, ரோகம் வருவதற்கு முன் அவன் இருந்த நிலைமையும் அவனுக்கு ஏற்கனவேயே ஏற்பட்ட அஸ்வாஸ்த்ய நிலைமைகளையும் நன்கு ஆராய்ந்து அறிந்து கொள்ளவேண்டியது மிகவும் அவசியமாகும். சில ரோகங்களில், சிற்சில அவயவங்களைப் பிரத்யேகமாகக் கவனித்து, அவைகளில் ஏற்பட்டிருக்கும் கோளாறுகளை அறிதல் சிகித்ஸைக்கு மிகுந்த உபகாரமளிக்கும். மேற்கூறியவாறு செய்து,. பிரத்யக்ஷமாகவோ மற்ற எந்த ஸாதனங்களைக் கொண்டோ அறியப்படும் உண்மைகளையும், அவைகளுக்கு செய்யப்பட்ட சிகித்ஸைகளையும், அவைகளால் ஏற்பட்ட பலாபலன்களையும் பற்றி எழுதிவைக்கப்படும் ஒரு பட்டியலுக்கு, 'சிகித்ஸை பட்டியல்' என்று பெயரிடப்பட்டிருக்கிறது.

சுருங்கக் கூறின், அடியிற் கண்டவைகளைப் பற்றிய, வியாதி விஞ்ஞானத்துக்கு முக்கியமானதும், உபயோகமானதுமாயுள்ள குறிப்புகள் அவசியம் அவ்வப்போது எழுதப்பட்டிருக்க வேண்டும்.

1. பெயர், விலாஸம்.
2. வயது.
3. தொழில்.
4. ஆஹார விஹாரங்கள்.
5. சரீரத்தின் தற்போதைய நிலைமை.
6. ஆதுரனின் பூர்வ சரித்திரம்.
7. பெற்றோர்களைப் பற்றிய விவரங்கள்.
8. வியாதி நிர்ணயம்.
9. சிகித்ஸை.

பெயர்: பொதுவாக, யாருக்கு வியாதி ஏற்பட்டுள்ளது என்ற விவரத்தை அறிந்து ஆதுரனின் பெயரும், விலாஸமும் எழுதப்பட வேண்டும்,

**வயது:** ஆதுரனின் வயதைக் குறிப்பிடுவதால், அந்தந்த வயதுகளில் ஏற்படும் சில வியாதிகளின் விசேஷ அவஸ்தைகளை நிர்ணயிப்பது எளிதாகும்.

**தொழில்:** இதைக் குறிப்பிடுவதால், சிற்சில தொழிலாளர்களுக்கிடையே அவரவர்கள் தொழிலுக்கேற்ப உண்டாகும் வியாதிகளின் சில முக்கியாம்சங்களை அறிந்துகொள்ள முடியும்.

**ஆஹார விஹாரங்கள்:** சிற்சில பழக்க வழக்கங்களை யொட்டி ஆஹார ஜரணம் முதலியவைகளில் ஏற்படும் விகிருதிகளைக் கொண்டு வியாதி நிர்ணயம் செய்வது ஸுலபமாகும்.

**சரீரத்தின் தற்போதைய நிலைமை:** இதனடியில் அஷ்டஸ்தான பரீக்ஷை, அங்கப்ரத்யங்க பரீக்ஷை, இவைகளாலும், தர்சனம், ஸ்பர்சனம், பிரச்னம் என்ற முறைகளினால் நிதானம், பூர்வரூபம், லக்ஷணம் உபசயம், ஸம்பிராப்தி என்ற இவ்வைந்து நிதான லக்ஷணங்களால் அறியமுடிந்த வரையிலும் குறிப்பிடப்பட்டால் தான் சிகித்ஸா நிர்ணயம் ஏற்படும்.

**ஆதுரனின் பூர்வ சரித்திரம்:** இவ்வாதுரனுக்கு இதற்கு முன் உண்டான வியாதிகளின் சரித்திரத்தை அறிவதால், இவ்வியாதிக்கும், அவைகளுக்கும் இருக்கக் கூடிய தொடர்பை அறியமுடியும்.

**பெற்றோர்களைப் பற்றிய விவரங்கள்:** சில மஹா வியாதிகளில் ஆதுரனுடைய பெற்றோர்களைப் பற்றிய விவரங்களைக் கேட்டறிதல் வியாதி நிர்ணயத்துக்கு உதவியாகும்.

மேற்கூறிய எல்லாவிதமான அறிவினால் ஆதுரனுடைய வியாதி என்ன என்பதை நிச்சயபுத்தியுடன் கூறுவது ஸாத்யமாகும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. அவ்வியாதியையும் உடனே குறித்துவிடவேண்டும்.

எப்பொழுது வியாதி நிர்ணயம் ஏற்பட்டதோ அதற்கேற்றபடியாகச் செய்யவேண்டியது— அவ் வியாதிக்குத் தக்கதாயுள்ள ஔஷதங்களைப் பிரயோகிப்பது தான். ஆனால் முதலில் சிகித்ஸா பத்ததியை எழுதிவிட்டு, அதன்பிறகு ஆதுரனுக்குக் கொடுக்கப்பட்ட ஔஷதங்களையும், அவைகளால் உண்டான குணதோஷங்களையும் அவ்வப்போது எழுதிவிடவேண்டும்.

மேற்கூறிய விவரங்களில் எவைகளைப் பற்றி எந்த அளவுக்கு விவரங்கள் தேவையோ அவைகளை மட்டும் குறிப்பிட வேண்டுமே தவிர, ஸம்பந்தமே இல்லாத விவரங்களைப் பற்றிக் குறிப்பிடுதல் காலதாமதத்துக்குத் தான் இடம் ஆகும். ஆதுரனை அனாவசியமாக அடிக்கடி உற்றுப் பார்த்தல், அவசியமில்லாக் கேள்விகளைக் கேட்டுக் கொண்டிருத்தல் முதலானவைகளை விலக்க வேண்டும். கண்கூடாக இருக்கும் லக்ஷணங்களையும், மனதுக்கு எந்த அபிப்பிராயம் உண்மை



பாகத் தோன்றுகிறதோ அவைகளையும், உள்ளது உள்ளபடியே குறிப்பிடவேண்டும்.

மேற்கூறியவைகள் எல்லாவற்றையும் ஒழுங்காகச் செய்யவேண்டுமாயின், குறிக்கவேண்டிய விவரங்களைக் காட்டும் பட்டியல் ஒன்று அத்யாவசியம் என்பதில் சிறிதும் ஸந்தேஹமிராது.

உதாரணப் பட்டியல் கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது.

## சிகித்ஸை பட்டியல் (चिकित्सा पत्रिका)
(CASE - SHEET)

பெயர். வயது. ஜாதி. பால்.

விலாசம். தொழில்.

வியாதியின் பெயர்.

வியாதியின் தற்போதைய நிலைமை.

வியாதியின் இருப்பு (காலவரை)

ஆதுரனுக்கு இதற்குமுன் வந்துள்ள வியாதிகளின் பூர்ண வரலாறு.

ஆதுரனின் பழக்க வழக்கங்கள், (ஆஹாரம், விஹாரம் முதலிய)

,, பெற்றோர்கள் முதலியோரைப் பற்றிய வரலாறு.

,, தற்போதுள்ள வியாதியின் வரலாறு.

அஷ்டஸ்தானங்களின் பரீக்ஷை: 1. நாடி. 2. மூத்ரம். 3. மலம். 4. நாக்கு. 5. சப்தம் 6. ஸ்பர்சம். 7. நேத்ரம். 8. ஆக்ருதி.

அங்கப்ரத்யங்கங்களின் பரீக்ஷை: 1. ஹ்ருதயம். 2. புப்புஸம். 3. ஆமாசயம். 4. பக்வாசயம். 5. யக்ருத், ப்லீஹம். 6. மூத்ராசயம். 7. கை, கால்கள்.

ஆதுரனின் தற்போதைய வியாதியின் அறிகுறிகள்.

விசேஷமாயுள்ளவைகளைப் பற்றிய விவரங்கள்.

ஸம்ப்ராப்தி,

சிகித்ஸா பத்ததி. சிகித்ஸா விவரணம்.

# நமது தபால்பெட்டி.

## ஸந்தேகங்கள்.

V. B. N. கேழ்க்கிறார் :

சரியாக இரண்டரை வயசு. ஒரு பெண் குழந்தை. 10-9-47-ல் நான் பரிக்ஷை செய்த போது இருந்த சரீரமானங்கள் :–

| | |
|---|---|
| உயரம் | 32 அங்குலம். |
| நாபிப் பிரதேசத்தில் சுற்றளவு | 29 ,, |
| மார்பு- ஸ்தனப் பிரதேசத்தில் ,, | 26 ,, |
| துடைமத்தியில் சுற்றளவு பதினேழரை | ,, |
| புஜம் சுற்றளவு ஒன்பதரை | ,, |
| தலைசுற்றளவு காது மேல்புரம் | 20 ,, |
| ,, மூகவாய் பக்கம் மேல் இருபதரை | ,, |
| எடை | 46 பவுண்டு. |

நிறை 46 பவுண்டுதானிருந்த போதிலும் பார்வைக்கு 60 பவுண்டுக்கு மேல் இருக்குமென்று தோற்றமளித்தது. கைகால்களுக்கு இடையில் சந்தே இல்லை. வயிறு, தலை கன்னங்கள், குண்டிப்புறங்கள் எல்லாம் மிகவும் பயங்கரமாய் பெருத்து இருக்கின்றன. காது கண்களுடைய கார்யங்கள் சுத்தமாயிருக்கின்றன. வாய் பேச முடியவில்லை. காரணம் ஊமையல்ல. மேதஸ்தான். குழந்தை படுத்தால் தானாக எழுந்திருக்க முடியாது. உட்கார்த்தி வைத்தபிறகும் தானாக நிற்கமுடியாது. நிற்க வைத்தாலும் ஆசிரயமின்றி அதிக நிமிஷங்கள் நிற்கமுடியாது. ரக்த தாது புஷ்டியாயிருக்கிறது. பாண்டுவாயில்லை. ஆகாரம்- அன்னம் மாவு பண்டங்கள் எல்லாம். 29 அங்குலம் வயிறு பெருமனுள்ள வயசு வந்தவர்கள் சாப்பிடுமளவு அன்னபானங்களை ஆவலுடன் அருந்துகிறது. மலஜலம் கழிவு அதற்கு தகுந்தவாறு. குழந்தையால் குந்திட்டு உட்கார்ந்து மலஜலம் கழிக்க வியலாது. பற்கள் பலமாக 5-வது வயதில் மூளைக்கு மேலான முளைத்துள்ளன. புத்தியின் வளர்ச்சிமட்டும் 2 வயதுக்குள்ளதே. அதிகமில்லை.

## விருத்தாந்தம்.

தாய் தந்தை யிருவருக்கும் பூர்ண ஆரோக்கியம். மாம்ஸமருந்தாத குலம். இது முதல் குழந்தை. இதன் 6-வது மாஸத்திலிருந்துதான் சரீரம் பெருக்க ஆரம்பித்தது. பிறகு நாளடைவில் மிகுதியாய்விட்டது. 12-வது மாஸத்திலிருந்து இப்போது 30-வது மாஸம் நடைபெறுகிறது. இதுவரையில் ஆங்கில முறைப்படி ஏதோ ஒரு தகுந்த வைத்தியருபதேசப்படிக்கு மருந்து முதலிய சிகித்ஸை நடத்



தப்பட்டு வருகிறது. சரீரத்தின் மாம்ஸ மேதஸ் அதிகமாகிக் கொண்டேபோகிறதே தவிர சிறிதும் குறையவில்லை. குழந்தைக்கு இளைய குழந்தை 10 மாஸத்தில் ஒன்றிருக்கிறது. அதன் வளர்ச்சியில் விகாரமொன்று மிதுவரை ஏற்படவில்லை.

இக்குழந்தைக்குள்ள வியாதியின் பெயர் காரணம், சிகித்ஸை முறை, ஔஷதங்கள் இவைகளை சாஸ்த்ர யுக்தி பிரமாணவசன அநுபவங்கள் எல்லாவற்றையும் வைத்ய வித்வான்கள் தயை செய்து உடனேயே வைத்திய சந்திரிகை மூலம் வெளியிட வேண்டுகிறேன்.

சாஸ்திரத்தில் மேதோ ரோகத்திற்குக் காரணமாகச் சொல்லியுள்ளவை எல்லாம் ஆறுமாஸக் குழந்தை பருவத்தில் அந்வயம் செய்யமுடியுமா வென்று மகத்தான ஸம்சயம். தாய்ப்பால்தான் குடித்துக் கொண்டிருந்தது. தாயாருக்கு ஒருவித ரோகமுமில்லை.

---

ஆசிரியர்களின் குறிப்புகள்:—

### ஸர்ஜன் ஜெனரல் அவர்களின் நடுநிலை புத்தி.

ஆலோபதிக் வைத்தியம் பயின்ற பெரிய பதவிக்கு வந்துவிட்ட சில டாக்டர்கள் தங்களை ஸர்வக்ஞர்களாக நினைத்துக் கொண்டு ஆயுர்வேதத்தைப் பற்றி விமர்சம் தங்கள் மனம்போன போக்குப்படி யெல்லாம் செய்வதை இந்நாளில் ஸகஜமாய்க் காண்கிறோம். ஆயுர்வேதத்தை முறைப்படி படிக்காத அவர்களுடைய பிதற்றுதல்களுக்கு எல்லையே கிடையாது.

ஆயினும், கோயமுத்தூரில் சென்ற ஸெப்டம்பரில் நடந்த டாக்டர்களுடைய ஸம்மேளனத்தில் பேசும் பொழுது சென்னை ஸர்ஜன் ஜெனரல் Col. Bhatia 'இந்திய வைத்திய முறையின்' எதிர்காலத்தைப் பற்றிய வினாவிற்கு விடையளிக்கையில்— தான் இந்திய வைத்தியம் படித்தவனல்ல, ஆதலால் அதைப்பற்றி ஆதாரத்துடன் பேச முடியாதவன். ஆயினும் இந்திய வைத்தியம் உயர்ந்த பலனளிக்குமென்பதில் தனக்கு ஸந்தேஹமில்லை என்று ஹ்ருதயத்திலுள்ளதைச் சொன்னார். இதுவே நேர்மை.

ஆனால் நமது ஸர்க்கார் ஆயுர்வேத விஷயமான சிறிய கார்யங்கள், பெரிய கார்யங்கள் எல்லாவற்றிலும் ஆயுர்வேதம் பயிலாத ஆங்கில வைத்தியம் பயின்ற டாக்டர்களை அதிகாரிகளாக நியமனம் செய்வதும், யோஜனை கூறச் சொல்லுவதும் உசிதமில்லை யென்பதை இன்னமும் தெரிந்து கொள்ளவில்லை.

### இந்திய வைத்தியர்களுடைய வகுப்புப் பிரிவினை திரும்பவும் ஊர்ஜிதம்.

இந்திய வைத்தியர்களிடையே இருந்துவந்த A. B. கிளாஸ் பிரிவினையை அகற்றும்படிக்கு இந்திய வைத்திய ஸென்டிரல் போர்டா

ரால் சிபார்சு செய்யப்பட்டு, பிரகாசம் மந்திரி ஸர்க்காரால் அங்கீகரிக்கப்பட்டு அதன்படிக்கு A. B. பிரிவினையை நீக்கிப் புதிய ஒரே ரிஜிஸ்டர் இந்திய வைத்தியர்கள் ஸகலருக்கும் பதிவு செய்யவேண்டிய ஏற்பாடுகளும் முடிவாகிக் கொண்டிருந்தன. என்ற சங்கதி நேயர்களுக்குத் தெரிந்தது. ஒரே ரிஜிஸ்டராக இருக்கக் கூடாது, பிரிவு வேண்டும் என்று A. கிளாஸ் L. I. M. வைத்தியர்கள் கிளர்ச்சி செய்துகொண்டிருந்ததும் தெரிந்திருக்கும்.

இப்போது சர்க்கார், பிரகாசம் மந்திரிசபை செய்துள்ள A. B. பிரிவினை எடுத்தலை எடுத்துவிட்டார்கள். பழையபடியே A. B. பிரிவினையை ஊர்ஜிதம் செய்துவிட்டார்கள். A. class, B. class-ல் பிரிவினைக்கு வைத்தியர்களுடைய யோக்கியதாம்சத்தில் புதிய ஏற்பாடு ஒன்றுமில்லை, முன்பு போலவேதான்.

இந்த A. B. கிளாஸ் தகராறு கவர்ன்மெண்டு இந்திய வைத்தியப் பள்ளிக்கூடம் ஆரம்பித்த நாள் முதல்கொண்டு பெரிதாக வளர்ந்து ஒருவாறு ஓய்ந்திருந்தது. ரிஜிஸ்டர் செய்துகொள்ளாத சில வைத்தியர்களை ரிஜிஸ்டர் செய்ய சில நேதாக்கள் சிரமம் எடுத்துக்கொண்டதின் மேல் ரிஜிஸ்டர் பிரிவினை அகற்றுதலையும் பற்றி கிளர்ச்சி எழுந்தது. இனிமேலாகிலும் இதுபோன்ற கிளர்ச்சி செய்யத்தேவையில்லை யென்று எமது சொந்த அபிப்பிராயம். தேசிய வைத்தியர்களுக்கு ரிஜிஸ்டர் செய்ய குறைந்தபக்ஷம் ஒரு யோக்கியதாம்சம் நிர்மானித்து, அதற்குக் குறைந்தவர்களை ரிஜிஸ்டரே செய்யாமல், ஒரே வகையான ரிஜிஸ்டர் செய்ய ஏற்பாடு செய்வதே உத்தமம். ஒரேவித ரிஜிஸ்டர் நிறுவப்பட்டு அதற்கு யோக்யதை உண்டாக்கும்படியான வைத்தியக் கல்லூரிகளையே, எல்லா இடங்களிலும் தனிப்பட்ட முறையிலும் நடத்தும் கல்லூரிகளும் நடத்தப்படவேண்டும். இனிமேல் B. class ரிஜிஸ்டருக்கே ஸந்தர்ப்பமில்லாமல் எல்லாப் பள்ளிக்கூடங்களுமே உயரவேண்டுமென்பதே எமது எண்ணம்.

ஓர் நற்செய்தி:

### Dr. ஜீவராஜ் மேதாவின் புதிய பதவி.

Dr. ஜீவராஜ் மேதாவை வைத்திய இலாகாவின் டைரக்டர் ஜெனரலாக அமைத்தது மன்றியில், இந்திய சர்க்காரின் ஆரோக்கிய மந்திரியினுடைய காரியதரிசியாகவும் நியமிக்கப்பட்டிருப்பதை நாம் பெருமையுடனும், சந்தோஷத்துடனும் வரவேற்கிறோம். Dr. மேதா அவர்கள் இதுவரை ஆயுர்வேத சாஸ்திர அபிவிருத்தியில் தான் கொண்டிருந்த மனப்பான்மையை செய்கையிலும் நடத்திக் காட்டுவார்கள் என திடமாக நம்புகிறோம்.

ஸ்ரீ தந்வந்த்ரயே நம:

# ஆசிரியர் குறிப்புகள்

## ஆரோக்கிய மந்திரி தயைசெய்து கவனிக்கவும்:

சென்ற செப்டம்பர் 13உ சென்னையில் கிராம வைத்தியப் புனருத்தாரணத்தைப் பற்றி திட்டங்களை ஆலோசனை செய்வதற்காகக், கூடிய ஆங்கில வைத்தியர்களுடைய மகாநாட்டிற்கு ஆரோக்கிய இலாகா மந்திரியார் விடுத்துள்ள செய்தியில்—'நமது தேசத்து மக்கள் 100-க்கு 90 பேர் கிராமத்தில் வஸிக்கின்றனர். ஆனால் டாக்டர்களில் 100-க்கு 90 பேர் நகரத்தில் குழுமியுள்ளார்கள். Bhore கமிட்டி கிராமங்களில் வைத்திய உதவி அதிகமாக உடனே ஏற்படுத்த வேண்டுமென்று கூறியது மிகவும் நியாயம்......... யுத்த ஸமயத்தில் கிராமங்களிலிருந்த வைத்திய சாலைகள் மூடும்படியாகி விட்டன. Bhore கமிட்டியின் சிபாரிசுப் படிக்கே ஸகல கிராமங்களுக்கும் வைத்திய உதவி ஏற்பாடுசெய்ய கவர்ன்மெண்டாருக்குப் பூர்ண ஆவலிருக்கின்றது. 1487 வைத்தியசாலைகள் அவசியமென்று திட்டமேற்பட்டிருக்கிறது. இப்போது மாகாணத்தில் இருக்கும் பொருளாதார நிலையை அநுஸரித்து முதல் 5 வருஷங்களில் 600 வைத்தியசாலைகள் மொத்தமிருக்கும்படியான ஏற்பாடுகளைச் செய்ய சர்க்கார் உத்தேசித்திருக்கின்றனர்...... மேலும் இந்த வைத்திய சாலைகளின் பிரிவினைத் திட்டங்களையும் பற்றி சுருக்கிக் கூறியிருக்கிறர்.

கிராமவாசிகளுடைய ஆரோக்கிய விஷயத்தில் மந்திரியாருக்குக் கவனம் ஏற்பட்டதைப் பற்றிப் பாராட்டுகிறோம். ஆனால் கிராமவாசிகளுக்கு வைத்திய உதவி எந்த விதத்தில் அளித்தால் உத்தமமாயிருக்குமென்ற வழியை மந்திரி கவனித்திருப்பதாகத் தெரியவில்லை. இவ்விஷயத்தில் மிக முக்கியமாய் கவனிக்கவேண்டிய அம்சங்களாவன :— கிராமவாசிகளுடைய பழக்க வழக்கங்களுக்கு எந்த வைத்திய முறை மிகவும் ஏற்றதாயிருக்கிறது? இதுவரையில் எந்த வைத்தியமுறை கிராமத்தினர்களுக்கு வைத்திய உதவி அளித்துக் கொண்டிருக்கிறது? எந்த வைத்திய முறையில் இந்த ஜனங்களுக்கு இன்றைக்கும் நாளைக்கும் அதிக விருப்பமிருக்கிறது? ஏன்? எந்த வைத்திய முறை குறைந்த செலவில் ஆகக்கூடியது? எது விஞ்ஞான சாஸ்திரப்படி உயர்ந்தது? ஆகிய விஷயங்கள். இவை யெல்லாவற்றுக்கும் உகந்து உத்தமமா யிருப்பது நமது ஆயுர்வேதந்தான். பொருளாதார நிலையை உத்தேசித்து 1487 வைத்தியசாலைகள் தேவையா யிருந்தாலும் வரும் 5 வருஷங்களுக்குள் 600 வைத்தியசாலைகளே நிறுவப்பட முடியுமென்கிறர். மேல்நாட்டு வைத்திய முறைப்படிக்கு ஒரு வைத்தியசாலை நடத்தத் தேவையான தொகையில் பாதியளவு

வைத்ய வாசஸ்பதி பண்டிட்

**P. S. ராமசர்மா அவர்களின்**

நீண்ட கால பரீக்ஷை அனுபவங்களினால் கண்டுபிடிக்கப்பட்டு

கைகண்ட பலனளிக்கும்

# "சக்தி ஸஞ்ஜீவி"

(Regd.)

குழந்தைகளுடைய சகல நோய்க் கட்டுகளை எந்நிலைமையிலும்
போக்குவதிலும் வராமல் தடுப்பதிலும் நிகரற்ற ஔஷதம்.

எங்கும் கிடைக்கும்.

தயாரிப்பவர்:—

**ஸ்ரீ சக்தி விலாஸ வைத்யசாலா,**

கரூர், S. I. Ry.


Published by Pandit S. M. Sundararajacharya for Tamil Nad Ayurveda
Maha Mandalam & Printed at the Sri Vilasam Press, Srirangam.